(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 4.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 சனவரி 21 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஷெஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ லசஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ (திருமதி) டயனா கமகே**

**கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

**கௌரவ உதயகாந்த குணதிலக்க**

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்***: பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2022 சனவரி 20 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ விதுர விக்ரமநாயக

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ குமார வெல்கம

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்"

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் –

(ii) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XVIII ஆம் பகுதியையும் ;

(iii) 2018 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XVIII ஆம் பகுதியையும் ;

(iv) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XVIII ஆம் பகுதியையும்; மற்றும்

(v) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XI, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XX, XXI மற்றும் XXII ஆம் பகுதிகளையும், நான்காவது தொகுதியின் VII, VIII மற்றும் IX ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கையின் எட்டாவது தொகுதியின் அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் உதவிகளின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் தொடர்பான அறிக்கையின் – VI ஆம் பகுதியைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2016 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் XVI மற்றும் XVII பகுதிகளையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XX ஆம் பகுதியையும்;

(ii) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் XIII ஆம் பகுதியையும்;

(iii) 2018 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXV ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXVIII ஆம் பகுதியையும்;

(iv) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXIX, XXX மற்றும் XXXI ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XIII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXII பகுதியையும்; மற்றும்

(v) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் VIII, IX, X மற்றும் XI ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர் —

(i) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்ஸ்மன்) தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை;

(ii) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை;

(iii) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் - செலவினத் தலைப்பு 04 தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(iv) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நெடுஞ்சாலைகள் அமைச்சர் —

(i) 2020 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ லங்கா கோஸ்ட் காவலர் துறையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ச**பாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) கல்வி அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 – 2020 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ச**பாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(11) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ச**பாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(12) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுகாதார அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) வெகுசன ஊடக அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை நிதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 1974 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டப்பட்டவாறான (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 டிசம்பர் 02 ஆம் திகதிய 2256/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினை சமர்ப்பித்தார்.

மேற்படி கட்டளை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(16) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2019 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(17) நீர்வழங்கல் அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நீர் வழங்கல் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(18) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(19) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனஜீவிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(20) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. காணி அபிவிருத்தி (திருத்தம்):** காணி அமைச்சர் பின்வரும் சட்டமூலத்தைச் சமர்ப்பித்தார், — (1 0 1 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2022 பெப்ரவரி 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அமர்வு :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பின்வருமாறு முப்பத்திரெண்டு (32) அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள், பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படுமாக:-

1. பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
2. நிதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
3. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
4. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
5. நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
6. வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
7. அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
8. கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
9. சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
10. தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
11. சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
12. வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
13. கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
14. நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
15. காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
16. கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
17. பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
18. நீர்வழங்கல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
19. மின்சக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு
20. வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

21. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

22. நெடுஞ்சாலை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

23. போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

24. இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

25. சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

26. வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

27. கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

28. வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

29. தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

30. பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

31. பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

32. அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஒவ்வோரு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் அமைச்சரவையின் உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் அதன் தவிசாளராகவும், இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர், மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து (5 ) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வொரு ஆலோசனைக் குழுவினதும் கூட்ட நடப்பெண் மூன்று (3) உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. சட்டவாக்க நிலையியற் குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக சட்டவாக்க நிலையியற் குழுவானது, தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலும் பதினைந்து (15) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 116 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவானது, தவிசாளராக சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலும் ஒன்பது (9) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

**8. சபைக் குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 117 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக சபைக் குழுவானது, தவிசாளராகச் சபாநாயகரையும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மேலும் பதினான்கு (14) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினாறு (16) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இருபத்திரெண்டு (22) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இருபத்திரெண்டு (22) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. பொது மனுக்கள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவானது, தெரிவுக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இருபத்தி மூன்று (23) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. பின்வரிசைக் குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 126 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பின்வரிசைக் குழுவானது அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அரசாங்கக் கட்சியின் எட்டு (8) பின்வரிசை உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் எட்டு (8) பின்வரிசை உறுப்பிர்கள் ஆகியோரைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. உயர் பதவிகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 127(1) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழுவின் தவிசாளராகச் சபாநாயகர் இருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. ஒத்திவைப்பு ( ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து அதிமேதகு சனாதிபதி அவர்கள் முன்வைத்த கொள்கைப் பிரகடனம்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் தொடருவதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. விடயம் (2022 சனவரி 29 )

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 10.52 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக" என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.04 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்குவாராக" என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.32 மணிக்கு கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்கினார்.)

"கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக" என கமத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.42 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2022 பெப்ரவரி 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.